செ.வெ.எண். 97 நாள் 29.01.10

செய்தி வெளியீடு– 29.1.2010

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போர்க்குக் குறைந்தபட்ச கால வரம்பு 5 ஆண்டுகள் என்பது 3 ஆண்டுகள் என மேலும் குறைப்பு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வருவோர்க்கு, அவர்களுடைய ஆக்கிரப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் இந்த அரசினால் 2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டத்தில், காலவரையறை 10 ஆண்டுகள் என்பது 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டதுடன், இத்திட்டத்தின்கீழ் வீட்டுமனைப்பட்டா பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பும் முற்றிலும் நீக்கப்பட்டது. இதன் பயனாகக் கடந்த மூன்றரை ஆண்டுகளில் 6 இலட்சத்து 99 ஆயிரத்து 917 பேருக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் மேலும் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வீட்டுமனைப்பட்டா பெற்றுப் பயன்பெறும் வகையில், “குறைந்த பட்சக் குடியிருப்புக் கால வரம்பு மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்படும்” என 6.1.2010 அன்று சட்டப்பேரவையில் நிகழ்ந்த ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, அரசு நிலங்களில் பல ஆண்டுகளாக வீடு கட்டிக் குடியிருப்போர் ஐந்தாண்டுகளாவது குடியிருந்திருக்க வேண்டும் என்பதை மூன்று ஆண்டுகள் குடியிருந்தால் போதும் என்று மேலும் குறைத்து முதலமைச்சர் கலைஞர் இன்று (29.1.2010) ஆணையிட்டுள்ளார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிறப்பித்துள்ள இந்த ஆணையின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வீட்டுமனைப்பட்டா பெறும் அரிய வாய்ப்பு உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

******

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9